திருப்பூர் மாவட்டம்
நாகநாயக்கன்பட்டி ஊராட்சி
வெள்ளகோவில் வட்டாரம்

நாகமநாயக்கன்பட்டி ஊராட்சி (இரண்டாம் நிலை)

வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம்

தீர்மான நகல்

2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 03-ம் தேதி புதன்கிழமை காலை 11.00 மணிக்கு நாகமநாயக்கன்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கை நகல்.

தலைமை : எம்.கலிதா தலைவர் அவர்கள்.

தலைவர் உட்பட கலந்து கொண்ட உறுப்பினர் எண்ணிக்கை : 10

பொருள் : 5	தீர்மானம் : 5/2024
திருப்பூர் மாவட்டம், காங்கயம் வட்டம், நாகமநாயக்கன்பட்டி ஊராட்சிக்குட்பட்ட உத்தமபாளையம் கிராமம் ரீ.ச.எண்.430/4B, 431/A2-ல் 1.4625 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் (பொ) மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் திருப்பூர் அவர்களின் செயல்முறை ஆணை கோப்பு எண்: WSI/MQ559/2023/TCP நாள்:- 12.10.2023 (ம.வ./ந.ஊ(திமா)எண்: 270/2023) எண்ணிடப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு சாலை பகுதிகள் (சுவர் முடுக்கு உட்பட) பொது உபயோகத்திற்கு வெள்ளகோவில் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்: 3988/2023 நாள்:- 05.09.2023 மற்றும் TANGEDCO க்கான பொது உபயோகத்திற்காக தானமாக வெள்ளகோவில் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்: 3989/2023 நாள்: 05.09.2023-ன்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொது ஒதுக்கீடு இடத்துக்கு மனுதார் திரு.K.முத்துச்சாமி அரசு கணக்கில் உரிய தொகை செலுத்தப்பட்டுவிட்டதாலும் ரீ.ச.எண்.430/4B, 431/A2-ல் 1.4625 ஏக்கர் பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள மனைப்பிரிவுக்கு அரசு விதிகளுக்குட்பட்டு உரிய தொகை அரசு தலைப்புகளில் செலுத்தப்பட்டும் நிலப்பயன் மாற்றுத்தொகை மற்றும் கூராய்வு கட்டணம் செலுத்தப்பட்டு இரசீது ஊராட்சி மூலம் பெற்றுக்கொண்டு பின்னர் விதிகளுக்குட்பட்டு மனைப்பிரிவுக்கு வரைபட அங்கீகாரம் வழங்க ஊராட்சி மன்றத்தின் அங்கீகாரம் கோரப்படுகிறது.	அங்கீகரிக்கப்பட்டது

(உண்மைநகல்)

தலைவர்
நாகமநாயக்கன்பட்டி ஊராட்சி

திருப்பூர் மாவட்டம் - வெள்ளகோவில் வட்டாரம்

நாகமநாயக்கன்பட்டி கிராம ஊராட்சி மனைப்பிரிவு அனுமதி உத்தரவு

நாகமநாயக்கன்பட்டி கிராம ஊராட்சி தலைவர் / செயல் அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை :- திருமதி.எம்.கவிதா

.....

மனைப்பிரிவு அனுமதி எண் :- 01/2023-2024 நாள் :- 04.01.2024

பொருள் : மனைப்பிரிவு அனுமதி - திருப்பூர் மாவட்டம் - வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம்-நாகமநாயக்கன்பட்டி கிராம ஊராட்சி - உத்தமபாளையம் கிராமம் ரீ.ச.எண்.430/4B, 431/A2-ல் மனைப்பிரிவிற்கான அனுமதி அளித்து உத்தரவிடுதல் - தொடர்பாக,

பார்வை :- 1. அரசாணை எண். 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1)துறை , நாள். 04.02.2019 மற்றும் அரசாணை எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ந.நி-(1) துறை , நாள்:- 31.01.2020

2. நாகமநாயக்கன்பட்டி கிராம ஊராட்சிக்கு மனைப்பிரிவு சாலை பகுதிகள் (மூலை முடுக்கு உட்பட) மற்றும் பொது உபயோகம் தானப்பத்திரம் ஆவணம் எண்:- 3988/2023 நாள்:- 05.09.2023 மற்றும் TANGEDCO-க்கான பொது உபயோகம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண்:- 3989/2023 நாள்:- 05.09.2023

3. உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,திருப்பூர் மாவட்டம் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:- WSLMQ559/2023/TCP நாள்:- 12.10.2023

4. மனுதாரர் திரு.K.முத்துச்சாமி த/பெ கருப்பணகவுண்டர் அவர்கள் கட்டணங்கள் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள் :- 05.09.2023

5. நாகமநாயக்கன்பட்டி கிராம ஊராட்சி தீர்மான எண்:- 5/2024 நாள்:- 04.01.2024

உத்தரவு :-

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள்-2019 துணை விதி 47-ன் படி திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், வெள்ளகோவில் ஊராட்சி ஒன்றியம், நாகமநாயக்கனபட்டி கிராம ஊராட்சிக்குட்பட்ட உத்தமபாளையம் கிராமம் ரீ.ச.எண்:- 430/4-ல் 0.71¼ ஏக்கர் மற்றும் 431/A-ல் 0.75 ஏக்கர் பரப்பளவு கொண்ட இடத்தில் அமைக்கப்பட்ட மனைப்பிரிவிற்கான இடத்தில் பார்வை 2-ல் காணும் மனைப்பிரிவு சாலை பகுதிகள் (மூலை முடுக்கு உட்பட) மற்றும் பொது உபயோகத்திற்கான இடம் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டமைக்கான தானப்பத்திரம் ஆவணம் எண்:- 3988/2023 நாள்:- 05.09.2023 மற்றும் ஆவணம் எண்:- 3989/2023 நாள்:- 05.09.2023 படியும், பார்வை 4-ல் காணும் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்/உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்

அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்:- WSLMQ559/2023/TCP நாள்:- 12.10.2023-ன் படி மேற்கண்ட இடத்தில் அமையவுள்ள உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு ம.வ/ந.ஊ(தி.மா) எண்: 270/2023 என எண்ணிடப்பட்டு தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டதன் படியும், மனுதாரர் திரு.K.முத்துச்சாமி த/பெ கருப்பணகவுண்டர் அவர்களின் கட்டணங்கள் செலுத்திய விபரம் பெறப்பட்ட நாள்:- 03.01.2024-ன் படியும், நாகமநாயக்கன்பட்டி கிராம ஊராட்சி தீர்மான எண்:- 5/2024 நாள்:-03.01.2024-ன் படியும் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மனைப்பிரிவிற்கு அங்கீகாரம் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள்:-

1. தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் - 2019 துணை விதி 47-ல் மனைப்பிரிவிற்காக விதிக்கப்பட்டுள்ள அனைத்து விதிகளும் இம்மனைப்பிரிவிற்கு பொருந்தும். எனவே பொருத்தமான விதிகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.
2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,திருப்பூர் மாவட்டம் செயல்முறை ஆணை ந.க.எண்:-WSLMQ559/2023/TCP நாள்:-12.10.2023-ன் படி அங்கீகரிக்கப்பட்ட குடியிருப்பு மனைப்பிரிவு ம.வ/ந.ஊ(திமா) எண்:-270/2023 வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலையின் அமைப்புகள், அளவுகள் மற்றும் பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டு நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு துறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.
3. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எவ்வித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 0.6 மீ x 1.2 மீ அளவிலான நிரந்தர அறிவிப்பு தகவல் பலகை பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தமாக நிறுவப்பட வேண்டும்.
4. மனைப்பிரிவு சாலை பகுதிகள் (மூலை முடுக்கு உட்பட) பொது உபயோகத்திற்கு மற்றும் TANGEDCO -க்கான பொது உபயோகத்திற்கான உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யபட்டமைக்கான இடத்தை எவ்வித சேதாரமும் ஏற்படாமல் ஐந்து வருடத்திற்கு மனை ஏற்பாட்டாளர் தங்களது சொந்த செலவில் பராமரிப்பு செய்ய வேண்டும்.

தலைவர்/செயல் அலுவலர்
நாகமநாயக்கன்பட்டி கிராம ஊராட்சி

பெறுதல் :-

1. திரு K.முத்துச்சாமி
   கதவு எண். 158
   அக்கரைப்பாளையம்
   தாராபுரம் மாம்பாடி (அஞ்சல்)
   திருப்பூர்-638106

நகல் :-

1. உதவி இயக்குநர், நகர் ஊரமைப்பு துறை,
   மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருப்பூர், திருப்பூர் மாவட்டம்.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), வெள்ளகோவில் வட்டாரம்.